கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. சுற்றுநிருப இல: 2015/15
உமது இல / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date 04-12-2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் அலுவலர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
வடக்கு மாகாணம்.

## பாடசாலை தவணை அட்டவணை, பாடசாலை செயற்பாடுகளடங்கிய நாட்காட்டி, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் - 2016

1. பாடசாலை தவணை அட்டவணை -2016

1.1 மத்திய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இல. 22/2016 இன் 2016ஆம் ஆண்டு பாடசாலை தவணை அட்டவணைக்கமைய, வடக்கு மாகாணப் பாடசாலைகள் இயங்குவதனை உறுதிப் படுத்தல் வேண்டும்.

1.2 மேற்படிச் சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டது போல், 2016 ஆம் ஆண்டு பாடசாலை நாட்களாக 197 நாட்கள் பாடசாலை நடாத்தப்பட வேண்டுமென்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்

2. பாடசாலை செயற்பாடுகளடங்கிய நாட்காட்டி – 2016

2.1 மத்திய கல்வி அமைச்சின் 22/2016 இலக்கச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டதுபோல், மாகாண மட்ட, வலய மட்ட பாடசாலைச் செயற்பாடுகள் நாட்காட்டி வடிவில் தயாரிக்கப்பட்டு, சகல பாடசாலைகளுக்கும் 31.12.2015ஆம் திகதிக்கு முன்னதாக விநியோகிக்கப்பட்டு, பிரதி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

2.2 வருடாந்த பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் யாவும் எனது சுற்றுநிருப இல. 2015/12 இன்படி பெப்பிரவரி 10ஆந் திகதிக்கு முன்பு நிறைவுசெய்யப்படல் வேண்டும்.

2.3 பரிசளிப்பு விழா மற்றும் பல்வேறு தினங்கள் ( தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி மற்றும் வருடாந்தக் கல்விச் சுற்றுலா முதலானவை) யாவும் (01) முதலாம் அல்லது (2)இரண்டாம் தவணைக்குள் முடிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வகையான நிகழ்வுகள் (3) மூன்றாம் தவணைக் காலத்தில் செயற்படுத்த அனுமதி வழங்கப்பட மாட்டாது.

2.4 2016ஆம் வருடத்தின் முதலாம் தவணைக்குரிய பாடசாலை நேர சூசி/காலஅட்டவணை தயாரிக்கப்பட்டு, 31.12.2015ஆம் திகதிக்கு முன்பு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் அனுமதி பெறல் வேண்டும்.

2.5 வருடாந்தக் கணக்கெடுப்பு மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு முடிக்கப்படல் வேண்டும்.

2.6 பாடசாலைத் தவணைப் பரீட்சை மதிப்பீட்டுப் புள்ளிகள் அந்தந்தத் தவணை விடுமுறைக்கு முன்னதாக மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

2.7 மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் என்பவற்றின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட கணக்கறிக்கை மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு, வருடாந்தப் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படல் வேண்டும். வருடாந்த வரவு-செலவுத்திட்டமானது மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்விப் பணிமனையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.



செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021-2220794

3. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் - 2016

3.1 வருடாந்த, இடைக்கால அமுல்படுத்தற் திட்டங்களைப் பின்வரும் தொனிப்பொருளின் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

தொனிப்பொருள் 1: ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான பிரவேசச் சந்தர்ப்பங்கள் மற்றும் பங்கேற்பு விகிதாசாரத்தினை மேம்படுத்தல்.

தொனிப்பொருள் 2: ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தல்.

தொனிப்பொருள் 3: கல்வியின் சிறந்த நிர்வாகம் மற்றும் சேவை வழங்கலைப் பலப்படுத்தல்.

அடிப்படைத் தொனிப்பொருள்: இடைக்காலக் கல்வித்துறைசார் வியூகத் திட்டங்கள்.

கிடைச் செயற்பாடுகள்: பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக் கோட்பாடு.

3.2 2016ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, 2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

3.3 வருடாந்த அபிவிருத்தித் திட்டம் அனுமதிக்கப்படும் முறை

| வருடாந்த மதிப்பீட்டுத் தொகை | அனுமதியளிக்கும் அதிகாரி | |
|---|---|---|
| | தேசிய பாடசாலை | மாகாணப் பாடசாலை |
| (அ) ரூ. 2000000/= வரை | வலயக் கல்விப் பணிப்பாளர் | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| (ஆ) ரூ. 2000000/= - 5000000/= வரை | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| (இ) ரூ. 5000000/= இற்கு மேல் | மத்திய கல்வி அமைச்சுச் செயலாளர் | மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் |

3.4 2015ஆம் ஆண்டுக்கான பாடசாலை முன்னேற்ற அறிக்கை (Annual School Performance Report) தயாரிக்கப்பட்டு, அடுத்த வருடத்தின் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்